CHURCH OF THE
HOLY FAMILY
— KAJANG —

கிறிஸ்துவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே,

பாஸ்கா மகிழ்ச்சிகள் மிகவும் மகத்தானவை, நமது கொண்டாட்டங்களை ஒரே நாளில் கட்டுப்படுத்துவது போதாது. தவக்காலம் 40 நாட்களுக்கு மேல் அனுசரிக்கப்படுமானால், நமது கிறிஸ்தவ நம்பிக்கையின் மையமாக இருக்கும் பாஸ்கா மறைபொரிளின் கொண்டாட்டமான பாஸ்கா 50 நாள்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். இன்று, தூய ஆவியார் பெருவிழா பாஸ்கா காலத்தின் முடிவைக் குறிக்கிறது. காலத்திற்குப் பொருத்தமான முடிவாக, பாஸ்கா ஞாயிறு அன்று செய்ததைப் போல, திருப்பலியின் முடிவில் அருள்பணியாளர் அல்லேலூயா வாழத்தொலியை மகிழ்ச்சிபொங்க பாடுவதைக் கேட்போம்.

ஆனால் தூய ஆவியார் பெருவிழா (பெந்தகோஸ்து) பாஸ்கா காலத்திற்கு ஒரு பொருத்தமான முடிவு மட்டுமல்ல, திருத்தூதர்கள் மற்றும் சீடர்களின் மீது வந்த தூய ஆவியாரின் வழிமுறையில் அவர்கள் நெருப்பின் திருமுழுக்குப் பெறுவதால், திருஅவை பிறந்த நாள் அல்லது மறைதூதுப்பணியின் தொடக்கத்தையும் குறிக்கிறது. இந்த கிறிஸ்தவ பெருவிழாவுக்கு முன்பு, பெந்தெகொஸ்தே யூதர்களால் ஒரு முக்கியமான புனித திருப்பயண திருவிழாவாக ஏற்கனவே நினைவுகூரப்பட்டது - இயற்கை அளவில் இது கோதுமை அறுவடை விழாவாகவும், ஆன்மீக அளவில் இது சினாய் மலையில் மோசேவுக்கு பத்து கட்டளை வழங்கப்பட்டதையும் நினைவுபடுத்துகிறது. இப்போது, கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் மாட்சியின் வழி புதிய உடன்படிக்கையின் அறிமுகத்துடன், இந்த பெருவிழா அதிக முக்கியத்துவம் பெறுகிறது. இன்று, தூய ஆவியாரின் வருகையின் பலன்களையும் விளைவுகளையும் நாம் கொண்டாடுகிறோம்: மீட்பின் பணியின் நிறைவாகவும், திருஅவை மற்றும் அதன் இறைமக்களுக்கு அருளாகவும் மற்றும் அனைத்து நாடுகளுக்கும் நம்பிக்கையின் கொடையாகவும் விளங்குகிறது.

CHURCH OF THE
HOLY FAMILY
— KAJANG —

ஆண்டின் இக்காலக்கட்டத்தில் , நமது சமூகங்களில் பலர் அவர்களின் அறுவடைத் திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர்: காமத்தான் (சபா), கவாய் (சரவாக்) மற்றும் பெனான் (இந்தோனேசியா). காகாபே என்பது இந்த மூன்று விழாக்களையும் உள்ளடக்கியதொன்றகும். தமிழர்களின் பொங்கல் மற்றும் சீனப் புத்தாண்டு போன்ற பின்னணியைக் கொண்டிருந்தாலும், இந்தப் பண்பாட்டுக் கொண்டாட்டங்கள், சிறப்பான அறுவடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் கொண்டாட்டங்களில் இருந்து, இன, மதம் மற்றும் பின்னணியைக் கருத்தில்கொள்ளாமல் சமூகம் தங்கள் சகோதரத்துவப் பிணைப்பைக் கொண்டாடுவதற்கும் புதுப்பிப்பதற்கும் வாய்பாக அமைந்துள்ளன.

இந்த பல்வேறு கொண்டாட்டங்கள் ஒன்றிணைவது தற்செயலான நிகழ்வு அல்ல. இன்று, உண்மையில் இந்த திருக்குடும்ப பங்கில், நமது தேவாலயத்தில் நாம் காணும் தூய ஆவியாரின் கனிகளின் அபரிமிதமான அறுவடைக்காக நாம் கடவுளுக்கு நன்றி செலுத்தும் நாளாக உள்ளது. திருச்சபை வெறுமனே ஒரு மனித அமைப்போ அல்லது அது மனித கண்டுபிடிப்பின் விளைபொருளோ அல்ல என்பதை நினைவுகூர வேண்டும். நற்செய்தியின் விதைகளை நாம் விதைக்கலாம், ஆனால் தூய ஆவியானவரே தம்முடைய செயல் மூலம் வார்த்தையை உறுதிப்படுத்துகிறார், கடவுள் வளர்ச்சியைத் தருகிறார், பெந்தெகொஸ்தேவின் முதல் பலன்களுடன் தொடங்கிய அறுவடை இப்போது நம் நடுவிலும் நம் மூலமாகவும் உலக இறுதி வரை தொடர்கிறது.

இந்த தூய ஆவியார் பெருவிழாவனது குறிப்பிடத்தக்க சவால் மற்றும் வாய்ப்புகள் கொண்ட ஒரு காலக்கட்டதில் வருகிறது. தொற்றுநோயின் அவலங்கள் மற்றும் கட்டுப்பாடுகளில் இருந்து நாம் படிப்படியாக வெளிவருகிறோம். முடக்கப்பட்ட நிலையில் மோசமாக பாதிக்கப்பட்டு, மோசமான நிர்வாகத்தால் மேலும் சேதமடைந்து, சரிவின் விளிம்பில் தத்தளித்துக்கொண்டிருக்கும் ஒரு பொருளாதாரத்தை நாங்கள் தொடர்ந்து அனுபவித்து வருகிறோம். ஆன்மிக அளவில், நமது திருஅவை நல்லதொரு இயல்பு நிலைக்குத் திரும்பும்போது, பலர் இயல்கலை (ஆன்லைன்) திருப்பலியைப் பின்பற்றுவதை வழக்கமாக்கிக் கொண்டதாலும், உடல் ரீதியாக திரும்புவதற்கான முடிவை எடுக்காததாலும் தொடர்ந்து விலகி இருக்கிறார்கள்.

11 Jalan Gereja, 43000 Kajang, Selangor Darul Ehsan, Malaysia • +603 87331154 • HolyFamily@archkl.org

CHURCH OF THE
HOLY FAMILY
— KAJANG —

இன்னும் சிலர் தங்கள் ஆன்மீகத் முக்கியத்துவத்தை இழந்துவிட்டனர். மேலும் பங்கும் நம்பிக்கையும் அவர்களின் வாழ்க்கையில் தொலைதூர உண்மைகளாக மாறிவிட்டன. நமது ஆன்மீக மறுமலர்ச்சிக்கும், இறைமக்களின் அர்ப்பணம் மற்றும் இறைமக்களைப் பேணிக்காப்பது, வளர்ப்பது மற்றும் ஒன்றிப்பது, குறிப்பாக நம்பிக்கையிழந்த மற்றும் மந்தமான நம்பிக்கை கொண்டவர்களுக்கு முன்பு காலத்தைவிட தேவை மற்றுறொரு பெந்தகோஸ்து தேவைப்படுகிறது.

தொடக்கமாக, தூய ஆவியானவரிடமிருந்து நீங்கள் அருளையும் ஆவிக்குரிய பலன்களையும் பெற்று வாழத் தொடங்க நீங்கள் செய்யக்கூடிய சில செயல்பாடுகள் இங்கே உள்ளன:

1. ஜூலையில் தொடங்கும் RCIA பயிற்சிக்கு நண்பர் அல்லது உறவினரை அழைக்கவும்;
2. பங்கில் ஒரு பணியில் சேரவும்;
3. ஒருவரை பங்குத் திருப்பலிக்கு திரும்ப ஊக்குவிக்கவும்;
4. உங்கள் BEC இல் ஈடுபடுங்கள்;
5. அடுத்த உருவாக்க பயிற்சிக்குப் பதிவு செய்யவும்;
6. முதியோர் சந்திப்புக்கு இல்லங்களுக்குச் செல்லுங்கள்;
7. நீங்கள் திருப்பலிக்குத் திரும்பி வரவில்லை என்றால், நேரில் திருப்பலியில் கலந்துகொள்ள திரும்பி வர வேண்டிய நேரம்.

நமது எல்லா மனித முயற்சிகளிலும் தூய ஆவியாரின் உடனிருப்பு இன்றியமையாதது. 'ஆண்டவர், உயிர் கொடுப்பவர்'. ஏற்பட்டுள்ள இழப்புகளை சரிசெய்வதற்கும், தூய ஆவியானவர் நமது பங்கில் புதிய உயிர்ச்சக்தியை சுவாசிக்க அனுமதிக்கவும், என்ற நீடித்த நம்பிக்கையுடன் இந்த விழாவைக் கொண்டாடுவோம். நம்முடைய இறைவேண்டலினால், நம்முடைய நம்பிக்கை திடப்படும். தூய ஆவியானவர் நம்மை வழிநடத்தி, நமது தீர்மானத்தை பலப்படுத்தவும், 'பூமியின் முகத்தை புதுப்பிக்கவும்' நமது நிலையான வேண்டுகோளை ஏ்றாபாராக.

சபா, சரவாக் மற்றும் இந்தோனேசியாவைச் சேர்ந்த நமது நண்பர்கள் அனைவருக்கும், செலமட் ஹறி காமாடன், கவாய் டான் பெனான்!

உங்கள் அன்பு ஆயன்,
அருள்தந்தை மைக்கள் ச்சுவா மற்றும் அருள்தந்தை
போனபவென்ச்செர் ராயப்பன்.
பெந்தெகொஸ்தே பெருவிழா
ஜூன் 5, 2022
#HFKCOMEHOME

11 Jalan Gereja, 43000 Kajang, Selangor Darul Ehsan, Malaysia • +603 87331154 • HolyFamily@archkl.org